

# C190-ஐ உறுதி செய்ய பிரச்சாரம் செய்வோம்

இந்த உடன்படிக்கையானது ஆவணநிலையிலேயே நின்றுவிடாது உண்மை நடைமுறைக்கு கொண்டு வருவதில் தொழிற்சங்கங்கள் என்ற முறையில் நமக்கு முக்கிய பங்கு உள்ளது.

உடன்படிக்கையை உறுப்பு நாடுகள் உறுதி செய்து அதை அவர்களின் தேசிய சட்டங்களின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கு நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்

### தொழிற்சங்கங்கள் என்ன செய்ய முடியும்:

- சங்க உறுப்பினர்களிடமும் பொது சமூகத்திலும் இது பற்றிய கல்வியை வழங்குதல், விழிப்பு உணர்வை அதிகரித்தல் .
- ஒவ்வொரு நாட்டிலும் C190-ஐ உறுதி செய்ய தீவிரமாக பிரச்சாரம் செய்தல்.
- பணி உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை மையப்படுத்தி ஒன்ற திரட்டுதல்.
- மற்ற தொழிற்சங்கங்கள், தேசியமையங்கள், தன்னார்வலர் அமைப்புகள், முக்கியமாக பெண் உரிமை அமைப்புகள் இவற்றுடன் சேர்ந்து பணி இடங்களில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை ஒழித்தல்.
- இந்த உடன்படிக்கை உறுதி செய்யப்பட கட்டமைப்புகளை உருவாக்குதல்.

இங்கு பிரசாரத்திற்கான தரவுகளைக் காணலாம்

யூ.என்.ஐ க்ளோபல் யூனியன்: www.breakingthecircle.org
பீ.எஸ்.ஐ www.publicservices.international/campaigns/stop-gender-based-violence-at work? id=5676&lang=en
ஐ. யூ. எ॰॰ப் www.iuf.org/show.php?lang=en&tid=82
ஐ.டீ.டபிள்யூ.எ॰॰ப் www.idwfed.org/en/campaigns/c190
இண்டஸ்ட்ரிஆல் www.industriall-union.org/women-0
ஐ.எ॰॰ப்.ஜே www.ifj.org/what/gender-equality.html



பணி உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தல் குறித்த

# ஐ.எல்.ஓ உடன்படிக்கை *190*

## இது வாழ்க்கைகளை மாற்றும்

பணி உலகில் வன்முறையும் துன்புறுத்தலும் எல்லா இடங்களிலும் நடக்கலாம் – இணையவழியில், பணியிடத்தில், பயணம் செய்யும்போது,தொழிலாளர்கள் ஓய்வு எடுக்க , உணவு உண்ண, தங்களது உடல்நலத்தைக்கவனிக்க, உடல் உபாதைகளை தீர்க்க என அவர்கள் கூடும் அனைத்து இடங்களில், மற்றும் சமூக நிகழ்வுகளில்.

### நாம் இதை நிறுத்த முடியும்!

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ), ஜூன் 2019 ல் உடன்படிக்கை 190 (C190), பரிந்துரை 206 (R206) என்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச் சட்டங்களை ஏற்றுக்கொண்டதன் மூலம் பணி உலகில் வன்முறையையும் துன்புறுத்தலையும் நிறுத்தக் கூறியது.

இந்த புது உடன்படிக்கையானது பணிஒப்பந்த நிலை வேறுபாடின்றி- உள்ளுறைவாளர், பணிபயில்பவர், பயிற்சியில் இருப்பவர், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர், தன்னார்வலர்கள், வேலை தேடுபவர்கள் என யாராக இருந்தாலும் அனைத்து தொழிலாளர்களையும் பாதுகாக்கிறது..

- இது பாலியல் சார்ந்த வன்முறை மேல் ஆழ்ந்த கவனம் செலுத்துகிறது.
- பணி உலகில் பெண்கள் வன்முறையாலும் துன்புறுத்தலாலும் விகித சமமற்ற அளவில் பாதிக்கப்படுகிறார்கள்.
- இதில் பொது மற்றும் தனியார் துறை, நகர மற்றும் கிராமப்புற முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைசாரா பொருளாதாரத்தில் அமைந்த எல்லா துறைகளும் அடங்கும்.
- இது பணி இடங்கள் மட்டும் அல்லாது, அதை விட பரந்த பணி உலகிற்கே பொருந்தும்.
- C190 அனைவரையும் உள்ளடக்கியது, யாரும் விடுபட வில்லை.

### C190 ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?

- பணி உலகில் வன்முறையும் துன்புறுத்தலும் சகிக்கப்பட மாட்டாது.
- பணி உலகில் வன்முறைக்கும் துன்புறுத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதை நோக்கமாக்கொண்ட முதல் சர்வதேச தரநிலை இதுவே ஆகும்.
- அனைவருக்கும் வன்முறையும் துன்புறுத்தலும் இல்லாத பணி உலகிற்கான உரிமை உண்டு என்பதை இது அங்கீகரிக்கிறது.
- இந்த உடன்படிக்கை தேசிய சட்டங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புகிறது.

# மனப்பான்மைகளை மாற்றுவதும் பாலின சமநிலையை உறுதி படுத்துவதும்

ஒருவருக்கொருவர் இடையிலான மரியாதை மற்றும் கண்ணியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பணிக்கலாசாரத்தை வழங்குவதற்கும் அதனைத் தக்க வைப்பதற்கும் பணி உலகில உள்ள – அரசுகள், முதலாளிகள்>தொழிலாளிகள் என நம் அனைவருக்கும் பங்கு உண்டு.

- இந்த உடன்படிக்கை பணி உலகில் பாகுபாட்டையும் சமத்துவமின்மையையும் எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு அர்த்தமுள்ள கருவி ஆகும்.
- பெண்கள், புலம் பெயர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பல வகை பன்முக அடையாளங்களான இனம், கலாச்சாரம்,பூர்வீக நிலை, பாலின நோக்குநிலை, பாலியல் அடையாளம் ஆகியவற்றைக் கொண்ட மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புகளிலும் தொழில்களிலும், சமத்துவ உரிமை மற்றும் பாகுபாடின்மையை உறுதிப்படுத்த சட்டங்களை, அரசுகள் கொண்டுவரவேண்டும் என்று இந்த உடன்படிக்கை கூறுகிறது.
- பாலியல் வன்முறை மற்றும் துன்புறுத்தலின் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும் காரணிகளான பாலியல், கலாச்சாரம், சமூக க்கட்டுப்பாடுகள் போன்றவற்றை கணக்கில் கொண்டு, இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிட அபாயக் கணிப்பீடுகள் அமைவதால் , இதுதொடர்படைய நபர்களின் மனப்பான்மையை மாற்ற உதவும்..
- *C190* உடன்படிக்கை முதன்முறையாக தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு உடல்நலம் பாதுகாப்பு இவற்றை பாதிக்கும் ஒரு காரணியாக குடும்ப வன்முறையையும் சேர்க்கிறது.

## வன்முறை துன்புறுத்தல் என்றால் என்ன?

- **வன்முறை அல்லது துன்புறுத்தல் என்பது, உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பாலின அடிப்படையிலும் பொருளாதார ரீதியிலும் பாதிப்பை ஏற்ப்படுத்தும் அல்லது ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒருமுறையோ பலமுறையோ நிகழ்த்தப்படும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத நடத்தைகள், நடவடிக்கைகள் அல்லது மிரட்டல்கள் ஆகும்.**
- **வன்முறை அல்லது துன்புறுத்தல் உடல்ரீதியான தாக்குதலையும் மீறியது. அது பாலியல் துன்புறுத்தல், வார்த்தை மற்றும் உணர்வு ரீதியான துன்புறுத்தல், பயமுறுத்துதல், கூட்டமாக தாக்குதல், மிரட்டல்கள், பின் தொடர்தல் என பல வடிவங்களில் இருக்கலாம். வளஙகள் அல்லது பிற சேவைகளைப்பெற உரிமை மறுக்கப்படுவதும் சுதந்திரம் பறிக்கப்படுவதும் வன்முறையின் பிற வடிவங்கள் ஆகும்.**
- **இதை செய்பவர்கள் முதலாளிகள், மேலாளர்கள் மேற்பார்வையாளர்கள், சகநண்பர்கள், சகதொழிலாளர்கள், மட்டுமல்லாது வாடிக்கையாளர்கள், முதலாளிகளின் உறவினர்கள், நண்பர்கள், சேவை வழங்குபவர்கள் போன்ற மூன்றாம் மனிதராகக் கூட இருக்கலாம்.**
- **பெண்கள் விகித சமமற்ற அளவில் பாதிக்கப்பட்டாலும், வன்முறை ஆண்கள் பெண்கள் இருவரையும் பாதிக்கிறது.**
- **ஒருவர் அவரது பாலினம் அல்லது பாலியல் அடிப்படையில் வன்முறைக்கு உட்படுத்தப்படும்போது அது பாலியல்-அடிப்படையான வன்முறை என்று கூறப்படுகிறது. எந்தப் பொருளாதார பின்னணியைச்சேர்ந்தவராயினும், பெண்கள் மற்றும் சிறுமிகளில் மூன்றில் ஒருவர் அவர்கள் வாழ்நாளில் வன்முறையை அனுபவிக்கிறார்கள்.**

# C190-உம் தொழிற்சங்கங்களும் – இது நமக்கான கருவி, இதை நாம் பயன்படுத்த வேண்டும்

### உடன்படிக்கை *190* ன் படி:

- பணியிடப் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்தின் கீழ், குடும்ப வன்முறை உள்ளிட்ட பாலியல் அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தலும் சேர்க்கப்படவேண்டும்.
- முதலாளிகள் தொழிற்சங்கங்களுடன் கலந்து ஆலோசித்து வன்முறையையும் துன்புறுத்தலையும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு பணியிட நடத்தைப்போக்குகளையும் செயல்படுத்தவேண்டும்.
- இது அரசுகளை பணியிடத்தில் பாலியல் அடிப்படையான வன்முறை உள்ளிட்ட வன்முறையையும் துன்புறுத்தலையும் தடுக்கும் வகையில் தொழிற்சங்கங்களுக்கு பயிற்சியளிக்கவும் அதற்கான வளங்களை அவற்றிற்கு அளிக்கவும் கடமைக்குள்ளாக்குகிறது. சர்வதேசதொழிலாளர் அமைப்பின்(ஐ.எல்.ஓ),
- இரண்டு உறுப்பு நாடுகள் *C190* தீர்மானத்தை உறுதி செய்தபிறகு அது நடைமுறைக்கு வரும். ஆனால் தொழிற்சங்கங்கள் இவ்வாறு உறுதி செய்யபடும்வரை காத்திருக்கத் தேவையில்லை. தொழிலாளர்களின் வாழ்வில் மாற்றங்கள்க் கொண்டுவர இப்பொழுதே இதனை பயன்படுத்தலாம்.

**ஐ.எல்.ஓ உடன்படிக்கை 190**

**தொழிற்சங்கங்களும் தொடர்புடைய அனைவரும் பணி உலகில் வன்முறையையும் துன்புறுத்தலையும் எதிர்த்துப் போராடுவதற்கு *C190* உத்வேகம் அளிக்கிறது.**

**நாம் இப்போது இதை பயன்படுத்துவோம்!**

- பிரச்சாரங்கள் மற்றும் கூட்டுபேரம் மூலம் பாகுபாடு இன்மையையும் சமத்துவத்தையும் ஊக்குவித்தல்.
- உறுப்பினர்களிடையே பணி உலகில் வன்முறையும் துன்புறுத்தலும் என்றால் என்ன என்று புரியவைத்தல்
- உறுப்பினர்களிடையே *C190* பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். *C190* வன்முறையையும் துன்புறுத்தலையும் முக்கியமாக பாலியல் அடிப்படையான துன்புறுத்தலையும் ஒழித்து, லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான பணி சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்கள் வாழ்க்கையையே மாற்றும் உடன்படிக்கை ஆகும்.
- கூட்டுபேர ஒப்பந்தங்களில், *C190/R206* என்ற சட்டக்கருவிகளின் அடிப்படையில் மொழியைச் சேர்த்தல்.
- தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு பற்றிய கொள்கைகளில் வன்முறை மற்றும் துன்புறுத்தல் குறிப்பாக பாலியல் வன்முறையும் அடங்கும் என்பதை உறுதிப்படுத்த முதலாளிகளுடன் சேர்ந்து செயல்படுதல்
- வன்முறையையும் துன்புறுத்தலையும் எதிர்த்துப் போராடுவதற்காக, *C190/R206* அடிப்படையில் மொழியைச் சேர்க்க உலக அளவிலான கட்டமைப்பு ஒப்பந்தங்களின் பேச்சு வார்த்தைகளில் உலக அளவிலான தொழிற்சங்க கூட்டமைப்புகளுக்கு ஆதரவு அளித்தல்.